**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் – மட்டம் III**

**இறுதி பரீட்சை 1- 2023.'.2024**

**சட்ட முறைமை – LLU3602**

**காலம் – 03 மணித்தியாலயம்**

திகதி: 2025.05.10 நேரம்: பி.ப. 01.30 - பி.ப. 04.30

---

**வினாக்களின் மொத்த எண்ணிக்கை - 08**

**5 வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக. பகுதி I இலிருந்து குறைந்தது இரண்டு கேள்விகளையும் பகுதி II இலிருந்து மூன்று கேள்விகளையும் தேர்ந்தெடுத்து ஐந்து கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்கவும்.**

**தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

பகுதி I

இந்தப் பகுதியிலிருந்து ஏதேனும் **இரண்டு கேள்விகளுக்கு** (02) பதிலளிக்கவும்.

1.(i) வேறுப்பட்ட சட்ட மூலங்களின் வகைகளை விளக்கி பொருத்தமான உதாரணங்களை விடைகளில் எடுத்துக்காட்டி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

(ii) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டு நுட்பங்களை பகுப்பாய்வு செய்க.

1. நுட்பமாகப் பரிசோதித்தல் (Scanning)
2. மேலோட்டமாக நோக்குதல் (Skimming)
3. கவனம் செலுத்தி வாசித்தல் (Focused reading)

**(10 புள்ளிகள்)**

**(10+10 = 20 புள்ளிகள்)**

2 (i) ஒரு விளக்கமான சட்ட வாதத்தை உருவாக்க தேவையான அடிப்படை திறன்களை விரிவாக எடுத்துரைக்கவும்.

**(10 புள்ளிகள்)**

(ii) IRAC முறைமையின் பல்வேறு கூறுகளைக் குறிப்பிட்டு ஒவ்வொரு கூறும் எவ்வாறு ஒரு உறுதியான சட்ட வாதத்தை கட்டியமைக்க உதவுகின்றன என்பதை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(10 + 10 = 20 புள்ளிகள்)

3. (i) கல்வித்துறை கௌரவம் (Academic Integrity) தொடர்பான பெறுமானங்களை இணங்காண்க.

(10 புள்ளிகள்)

(ii) வேறுப்பட்ட கருத்து திருட்டை (Plagiarism) ஆராய்வதுடன் சரியான மேற்கோளிடல் (Proper Referencing) எவ்வாறு கருத்து திருட்டை தவிர்க்க உதவுகின்றது என்பதையும் ஆராய்க.

(10 புள்ளிகள்)

(10 + 10 = 20 புள்ளிகள்)

4. சமன் மற்றும் நிரோஷா என்பவர்கள் ஒரு கிராமப்புற பகுதியில் அமைந்த நிலத்தை முன்னோர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட சகோதரர்கள் ஆவர். அவர்களது தந்தை விருப்பாவணத்தை எழுதாது (intestate) இறந்த பின் பிணக்கொன்று எழுந்த போது சொத்துக்கள் தொடர்பில் மகன்களுக்கு முன்னுரிமை வழங்கும் நீண்டகால கிராம வழக்கை (village custom) அடிப்படையாகக் கொண்டு சமன் முழு சொத்தையும் கோருகிறார். நிரோஷா அதனை எதிர்த்து விருப்பாவணச் சட்டத்தின்படி சகோதரர்கள் சமமாக உரிமை பெற வேண்டும் என வாதிடுகிறார்.

சமன் குறித்த வழக்கம் பல தலைமுறைகளாக கிராமத்தில் பின்பற்றப்பட்டு உள்ளூர் சமூகம் அதை கட்டாயமானதாக ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் தமது குடும்பமும் இதே வழக்கினை தொடர்ந்து பின்பற்றி வந்ததாகவும் கூறுகிறார். ஆனால் நிரோஷா அந்த வழக்கம் எப்போதும் எழுதப்பட்டதாகவோ அல்லது சட்டமாக்கப்பட்டதாகவோ இல்லை எனக் குறிப்பிடுகிறார்.

இந்த சூழ்நிலையில் எழும் சட்டப் பிரச்சினைகளை இலங்கையில் உள்ளூர் வழக்கங்களை சட்ட மூலமாக இணங்காண்க. உங்கள் விடையில் வழக்கத்தை நீதிமன்றங்கள் அங்கீகரிக்க தேவையான நிபந்தனைகளை எடுத்துரைத்து சமன் காணியைக் கோர வழக்காறு விதியாக தங்கியிருக்க முடியுமா என கணிக்க.

(20 புள்ளிகள்)

5. "நீதியியல் முர்திர்ப்பு (Doctrine of Judicial Precedent) ஆனது சட்டத் முறைமையில் நிலையானத்தன்மையும் எதிர்பார்ப்பு திறனையும் உறுதி செய்யும். ஆனால் இது சட்ட வளர்ச்சியைத் தடுக்கவும் செய்கிறது."

மேற்கண்ட கூற்றை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்து குறிப்பாக இலங்கையில் நீதியியல் முர்திர்ப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் தேவையான நீதிமன்ற வழக்குகளின் உதாரணங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

6."ஒரு வழக்கறிஞர் என்பவர் தனது வாடிக்கையாளர்களின் உரிமைகள் பொறுப்புகள் மற்றும் நலன்களை வாதாடவும் பாதுகாக்கவும் நியமிக்கப்பட்ட பிரதிநிதி நம்பிக்கைக்குரிய ஆலோசகர் மற்றும் வழிகாட்டி என்பதுடன் நீதித்துறை அமைப்பின் சிறப்பான பொறுப்புடன் கூடிய அதிகாரியாகவும் ஒரு தொழில்முறை உறுப்பினராகவும் நேர்மையான குடிமகனாகவும் திருப்திகரமான வாழ்வாதாரத்தை அடைய முயற்சிப்பவர் ஆவார்."

A.R.B. Amarasinghe, *Professional Ethics and Responsibilities of Lawyers* (Lake House Investment Ltd, Colombo, 1993)

மேற்கண்ட கூற்றின் அடிப்படையில் சட்ட நிர்வாகத்தில் சட்டத் துறையின் பங்கு பற்றிக் விளக்குக.

(20 புள்ளிகள்)

7.(i) சர்வதேச பொருந்தணைகள் (International Treaties) ஒரு சட்ட மூலமாக அதன் முக்கியத்துவத்தை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ii) "ஒருமையியல் மற்றும் இருமையியல் பல்வேறு வகைகள் உள்ளன. என்பதே இக்கோட்பாடுகளின் முக்கியமான விமர்சனம் ஆனது உண்மையில் எந்த ஒரு நாட்டின் சட்ட அமைப்பும் முற்றிலும் ஒருமையியலோ அல்லது இருமையியலோ அல்ல."

M. Chiam, "*Monism and Dualism in International Law*" (Oxford Bibliographies, 2018)

உள்நாட்டு சட்ட முறைமைகளின் பொருந்தணைகளின் கீழான கடப்பாடுகளின் செயற்பாட்டை ஒருமையியல் மற்றும் இருமையியல் அணுகுமுறைகள் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதைக் குறித்து ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

**(10 + 10 = 20 புள்ளிகள்)**

8. கீழ்தரப்பட்டவற்றின் எவையேனும் இரண்டின் மீது சிறுகுறிப்பு வரைக.

   a. சட்டத்தின் அடிப்படை மூலமாக அரசியலமைப்பு (Constitution)

   b. ரோமன்-டச் சட்டத்தில் முக்கிய மூலமாக உரிமை உரை கூறும் சட்ட அறிஞர்களின் கருத்துக்கள் (Opinions of Jurists)

   c. சட்ட மூலமாக இலங்கையில் ஒப்புரவு (Equity)

**(20 புள்ளிகள்)**

*பதிப்புரிமை பெற்றது*